செ.கு. எண்:- 98 நாள்:- 09-03-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 9.3.2012

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம் கிராமம், பட்டுக்கோட்டை – அறந்தாங்கி சாலையில் 7.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது, மதுரையிலிருந்து பட்டுக்கோட்டை சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மேலகுருவாடி கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கவேல் என்பவரின் மகன் திருச்செல்வன் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், சிங்கபெருமாள் கோயில், ஜி.எஸ்.டி சாலையில் 7.3.2012 அன்று இரு சக்கர வாகனம் மீது மறைமலைநகரிலிருந்து செங்கல்பட்டு சென்று கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த மறைமலைநகர், கூடலூர் கிராமத்தைச் சேர்ந்த திரு நாகராஜ் என்பவரின் மகன் சாம்பசிவம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விரு சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த திருச்செல்வன் மற்றும் சாம்பசிவம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்துகளில் உயிரிழந்த திருச்செல்வன் மற்றும் சாம்பசிவம் குடும்பத்திற்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9